# காலநிலை நிதியை மாற்றியமைப்பது தொடர்பான சிஓபி-28 தலைமையின் அமர்வில் பிரதமர் பங்கேற்கிறார்

டிசம்பர் 01, 2023

ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் தேதி "காலநிலை நிதியை மாற்றுதல்" குறித்த சிஓபி-28 தலைமையின் அமர்வில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்றார். இந்த நிகழ்வு வளரும் நாடுகளுக்கு காலநிலை நிதியை மேலும் கிடைக்கக்கூடியதாகவும், அணுகக்கூடியதாகவும், மலிவு விலையிலும் மாற்றுவதில் கவனம் செலுத்தியது.

அமர்வின் போது, தலைவர்கள் புதிய உலகளாவிய காலநிலை நிதிக் கட்டமைப்பின் ஐக்கிய அரபு அமீரகத்தின் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டனர்.அந்தப் பிரகடனத்தில், உறுதிமொழிகளை வழங்குதல் மற்றும் லட்சிய விளைவுகளை அடைதல் மற்றும் காலநிலை நடவடிக்கைகளுக்கான சலுகை நிதி ஆதாரங்களை விரிவுபடுத்துதல் ஆகிய கூறுகள் உள்ளன.

பிரதமர் மோடி தனது உரையின் போது, உலகளாவிய தெற்கின் கவலைகளுக்குக் குரல் கொடுத்தார் மற்றும் வளரும் நாடுகளுக்கு அவர்களின் காலநிலை அபிலாஷைகளை அடைவதற்கும் அவர்களின் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளை செயல்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான வழிமுறைகளை, குறிப்பாக காலநிலை நிதியை வழங்குவதற்கான அவசரத்தை மீண்டும் வலியுறுத்தினார்.

இழப்பு மற்றும் சேத நிதியை வழங்குவதையும், சிஓபி-28 இல் ஐக்கிய அரபு அமீரகம் காலநிலை முதலீட்டு நிதியை நிறுவுவதையும் பிரதமர் வரவேற்றார்.

சிஓபி-28 காலநிலை நிதி தொடர்பான பின்வரும் சிக்கல்களை களைய பிரதமர் அழைப்பு விடுத்தார்:

◈காலநிலை நிதி குறித்த புதிய கூட்டு அளவீட்டு இலக்கில் முன்னேற்றம்
◈பசுமை காலநிலை நிதி மற்றும் தழுவல் நிதியை நிரப்புதல்

◈காலநிலை நடவடிக்கைக்காக பன்னாட்டு வளர்ச்சி வங்கிகள் மூலம் மலிவு நிதி கிடைக்க செய்தல்
◈வளர்ந்த நாடுகள் 2050ஆம் ஆண்டுக்கு முன் கார்பன் வெளியீட்டை அகற்ற வேண்டும்

**துபாய்**
**டிசம்பர் 01, 2023**